# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2077/54 - 2018 ජුනි මස 30 වැනි සෙනසුරාදා - 2018.06.30

*2077/54 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

வத்தேகம நகர சபை

**உல்லாச வரி விதித்தல்**

*(267 ஆம் அத்தியாயமான) உல்லாச வரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வத்தேகம நகர சபையின் செயலாளரால் தீர்மானிக்கப்பட்டுள்ள பின்வரும் முன்மொழிவு அப்பிரிவின் (2) ஆம் உப பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவ்உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

ஆர். எம். பீ. எஸ். ரத்நாயக்க,
செயலாளர்,
பிரதான கல்வி மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
மத்திய மாகாணம்.

பல்லேகலை,
*2018, பெப்புருவரி 14.*

**முன்மொழிவு**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உல்லாச வரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் உப பிரிவின் மூலம் மற்றும் 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க உல்லாச வரித்திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வத்தேகம நகர சபை அதிகார எல்லைக்குள் உல்லாச வரி அறவிடுவதற்காக நுழைவுச்சீட்டுக் கட்டணத்தில் (உல்லாச வரி தவிர) 20 % உல்லாச வரியை அறவிட (267 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் சட்டத்தின் 27 (3) பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தீர்மானிக்கின்றேன்.*

*07-463*